செ.வெ.எண்: 103 நாள்: 30.12.2021

# இளைஞர்கள் தொழில் கல்வி பயின்று சிறந்த தொழில் முனைவோரா உருவாகிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்லைவர் திரு.த.மோகன் இ.ஆ.ப., அவர்கள் மாவணர்களுக்கு அறிவுறுத்தினார்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட, வி.சாலை ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணி நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.12.2021) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

விழுப்புரம் மாவட்டத்தில் பொதுமக்கள் நலன் சார்ந்து பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கீழ் நடைபெற்றுவரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வி.சாலை ஊராட்சியில் கொங்கராம்பூண்டி சாலை அருகே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.6.40 இலட்சம் மதிப்பிட்டில் வரத்து வாய்க்கால் அகழி வெட்டும் பணி நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. பணி மேற்கொள்ளும், பணியாளர்களின் வருகை குறித்தும் பணி அளவீட்டு குறித்தும் ஆய்வு செய்யப்பட்டன. தொடர்ந்து, வி.சாலை ஊராட்சியில் பிரதம மந்திரி அவாஸ் யோஜனா வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டும் கட்டுமான பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, வீடு கட்டும் பணியினை விரைந்து முடித்திட பயணாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நரசிங்கனூர் ஊராட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் தீன்தயாள் கிராமியன் கௌசல்யா திட்டத்தின் கீழ் கிராமப்புற இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொழிற்பயிற்சி பெறும் இளைஞர்கள் தொழிற்சார்ந்த பயிற்சிகளை நன்கு கற்று சிறந்த தொழில் முனைவோராக உருவாகிட வேண்டும். பிறறை சார்ந்து வாழாமல் சுய வேலை வாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ஆர்.சங்கர், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.பூ.காஞ்சனா, விக்கிரவாண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.